IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

MCOP.No.480/2012 Date: 24.01.2025.

PW1-சாந்தி

சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து சமயத்தில் நான் கூட்டாத்துப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் பேருந்திற்காக காத்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது அரசு பேருந்து திருப்புவதற்காக அதன் ஓட்டுநர் பின்பக்கமாக நகர்த்தி கொண்டிருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அந்த பேருந்தின் முன் படிக்கட்டில் ஏற முயன்ற போது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் வேறு பேருந்திற்காக தான் நின்று கொண்டிருந்தேன். அந்த பேருந்தின் முன் சக்கரம் என் மீது ஏறி தான் எனக்கு காயமானது என்றால் சரிதான். மேற்படி பேருந்து என் ஊர் பாலப்பட்டி வழியாக செல்லும் என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனகுறைவு தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. அரசு பேருந்தின் ஓட்டுநரும் நடத்துனரும் கவனமாக தான் பேருந்தை பின்னால் நகர்த்தினார்கள் என்றாலும் அவர்கள் மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.8,000/- சம்பாதித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-சாந்தி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி